# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 72/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **முத்துக்குமரன்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **முத்துசாமி** | தொழில் | .. | **தறி வேலை** |
| வயது | .. | 34 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **இடங்கணசாலை** | நாள் | .. | 09.10.2023 |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09-ஆம் நாள் திங்கட்கிழமை திரு. முத்துக்குமரன் த/பெ. முத்துசாமி என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதி தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1 ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 14.02.2001 தேதியிட்ட பரிவர்த்தனை ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கணசாலை பிட்-2 கிராம பட்டா எண் 740 க்கான இணைய வழி நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள மின் கட்டண ரசீதுகள் அசல் (3 எண்ணிக்கை) **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பை 1 ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை குறியீடு செய்ய வா.சா.1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/முத்துக்குமரன்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககரி.